

சிவகங்கை மாவட்டம் அரளிக்கோட்டை பகுதியில் சிலம்பம், கராத்தே உள்ளிட்ட போட்டிகளுக்கு பள்ளி மாணவ, மாணவிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அண்மையில் நடந்த கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளிலும் அம்மாணவர்கள் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்தினார்கள். அந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து அவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழை வழங்கி வாழ்த்தினார். உடன் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கை மாறன் மற்றும் பலர் உள்ளனர்.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சிவகங்கை வடக்கு ஒன்றியம் சார்பில், பெருமாள்பட்டியில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். உடன் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்டத் துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரூஸோ, ஒன்றியச் செயலாளர் முத்துராமலிங்கம் மற்றும் பலர் உள்ளனர்.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சிவ கங்கை மாவட்டக் கழகம் சார்பில், அரளிக்கோட்டை கிராமத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். உடன் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், ஆ.தமிழரசி எம்.எல்.ஏ., மாவட்டத் துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் பலர் உள்ளனர்.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூரில் உள்ள சிறுகதை மன்னன் என்று கலைஞரால் போற்றப்பட்டவர் கழகத்தின் மூத்த முன்னோடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த எஸ். எஸ்.தென்னரசு அவர்கள். நினைவிடத்துக்குச் சென்று மலர் தூவி மரியாதை செய்தார். உடன் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.





